Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ்

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை 318	உள்ளூர் - 18.11.2026	புதன்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue 318	வெளியூர் - 19.11.2026	வியாழக்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

12 ராசிகளுக்கான பரிகார முறைகள்!

புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!

தீவிரப் புயலானது 'அக்வான்'!

ஆன்லைனில் இ-சிஎஸ்ஆர் பெற வசதி!

முடிவுக்கு வருகிறது நெதன்யாகு ஆட்சி...!

இஸ்ரேல், நவ. 18–

இஸ்ரேலில் கடந்த அக்டோபர் 27ம் தேதி நடந்த பார்லிமென்ட் தேர்தலில், நெதன்யாகுவின் வலதுசாரிக் கூட்டணி 53 இடங்களை மட்டுமே கைப்பற்றியது. ஆட்சியமைக்கத் தேவையான 61 இடங்களை அக்கூட்டணி இழந்தது. இஸ்ரேல் அதிபர் புதிய கூட்டணி அரசை அமைப்பதற்கான அழைப்பை எதிர்க்கட்சித் தலைவர் காடி ஐசன்கோட்டுக்கு விடுத்துள்ளார்.



கூட்டணியை இறுதி செய்ய அவருக்கு இன்னும் ஐந்து வாரங்கள் வரை அவகாசம் உள்ளது. இந்த சூழலில், எதிர்க்கட்சித் தலைவர் காடி ஐசன்கோட்டால் வேட்பாளராக நிறுத்தப்பட்ட மத்தான் கஹானா இரண்டு அரபு அரசியல் கட்சிகளின் ஆதரவுகளைப் பெற்று வெற்றி பெற்றார். நெதன்யாகுவின் லிகுட் கட்சி சார்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளர் ஓபிர் காட்ஸ் 52 ஓட்டுக்களை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தார்.

அரபுக் கட்சிகளின் ஆதரவுடன் கஹானா தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு நெதன்யாகு தரப்பு கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. இந்தப் பதவியை ஏற்றுக்கொண்ட கஹானா, ''மிகுந்த மரியாதையுடன், நான் இப்போது இஸ்ரேல் நெசெட்டின் சபாநாயகர் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன்'' என்றார். இந்த முடிவை வரவேற்ற ஐசன்காட், இது ஒரு புதிய அத்தியாயத்தின் துவக்கம் என கூறினார்.

சபாநாயகர் பதவியைக் கைப்பற்றியதன் மூலம் நாடாளுமன்றத்தின் செயல்பாடுகளை எதிர்க்கட்சிகள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளன. இஸ்ரேலின் அரசியல் எதிர்க்கட்சிகள் பெஞ்சமின் நெதன்யாகுவைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்குவதற்கு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. இஸ்ரேலில் நெதன்யாகு ஆட்சி முடிவுக்கு வருகிறது.

மோசமான தருணம்!

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: என்றென்றும் நீங்காத அவமானம். இன்று இரவு, பயங்கரவாத ஆதரவாளர்களின் ஓட்டுக்களை கொண்டு, சபாநாயகர் ஒருதலைப்பட்சமாக நியமிக்கப்பட்டுள்ளார். வரலாற்றிலேயே மிக மோசமான தருணம். தேசிய கீதத்தை அவமதிப்பவர்களிடம் நாட்டின் அரசின் சாவியை ஒப்படைப்பதை இஸ்ரேல் மக்கள் எதிர்க்கிறார்கள்.

இஸ்ரேல் மக்கள் ஒற்றுமையை விரும்புகிறார்கள். ஐசென்கோட், பென்னட் மற்றும் லிபர்மேன் ஆகியோர் இன்று தேசிய ஒற்றுமைக்கு முன்னுரிமை அளிக்காமல், பயங்கரவாத ஆதரவாளர்களுக்கு ஆதரவளிக்கும் வழியைத் தேர்ந்தெடுத்துள்ளனர். வரலாறு இதை நினைவில் வைத்திருக்கும். இவ்வாறு தெதன்யாகு கூறியுள்ளார்.

தள்ளுபடியா... தந்திரமா?

இனி பழைய விலையையும் காட்டணும்! ஆன்லைன் ஷாப்பிங்கில் ஏமாற்றுக்குக் கடிவாளம்!

ஜன. 1 முதல் புதிய விதிகள் அமல்!!

புதுடெல்லி, நவ. 18–

ஆன்லைன் வர்த்தகத்தில் விலை, விளம்பரம், விற்பனையாளர் விவரங்கள் ஆகியவற்றில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும், நுகர்வோரைத் தவறாக வழிநடத்துவதைத் தடுக்கவும் திருத்தப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் அமலுக்கு வருகின்றன.



தள்ளுபடியின் உண்மை தெரியும்!

தள்ளுபடி அறிவிக்கும்போது, குறைக்கப்பட்ட விலையுடன் அதற்கு முந்தைய 30 நாட்களில் பொருள் வழங்கப்பட்ட மிகக் குறைந்த விலையையும் காட்ட வேண்டும். விலையை உயர்த்திவிட்டு பெரும் தள்ளுபடியாகக் காட்டும் உத்தியை வாடிக்கையாளர்கள் கண்டறிய இது உதவும்.

தேடலில் தந்திரம் கூடாது!

வாடிக்கையாளர்களைத் தவறாக வழி நடத்தும் வகையில் தேடல் முடிவுகளை மாற்றியமைக்கத் தடை. பணம் செலுத்தி முன்னிலைப்படுத்தப்படும் பொருட்களில் 'விளம்பரம்' அல்லது 'Sponsored' என்ற குறிப்பு தெளிவாக இடம்பெற வேண்டும்.

மறைமுகக் கட்டணங்களுக்கு முற்றுப்புள்ளி!

வாடிக்கையாளர்களுக்குத் தெரியாமல் கட்டாயக் கட்டணங்கள் வசூலித்தல், தேவையற்ற காப்பீட்டைச் சேர்த்தல் உள்ளிட்ட ஏமாற்று உத்திகள் கூடாது. 'டார்க் பேட்டர்ன்' வழிகாட்டுதல்களின்படி ஆண்டுதோறும் சுயதணிக்கை செய்து, அதற்கான சான்றிதழைத் தளத்தில் வெளிப்படையாகக் காட்ட வேண்டும்.

பில்லில் உண்மையான விற்பனையாளர்!

பொருளை விற்பவரின் பெயரும் விவரங்களும் பில்லில் தெளிவாக இடம்பெற வேண்டும். வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல்களை வணிக நோக்கில் பயன்படுத்த உரிய சம்மதம் பெறப்பட வேண்டும்.

வாங்கும் முன்பே முழு விவரம்!

இறக்குமதிப் பொருட்களில் இறக்குமதியாளர் விவரங்களும் தயாரிக்கப்பட்ட நாடும் குறிப்பிடப்பட வேண்டும். காலாவதி அல்லது பயன்பாட்டுக் காலம், வாரண்டி, பொருளைத் திருப்பி அனுப்புதல் மற்றும் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான நிபந்தனைகள் ஆகியவை வாங்குவதற்கு முன்பே தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

புகாருக்கும் காலக்கெடு!


நுகர்வோர் புகார்களுக்கு 48 மணி நேரத்திற்குள் ஏற்பளித்து, ஒரு மாதத்திற்குள் தீர்வு வழங்க வேண்டும்.

விலை முதல் புகார் தீர்வு வரை — வெளிப்படைத்தன்மையே புதிய விதிகளின் மையம்!

பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சர்கள், இணையமைச்சர்கள் கூட்டம்!

புதுடெல்லி, நவ. 18–

புது தில்லியில் பிரதமர் மோடி தலைமையில், அனைத்து மத்திய அமைச்சர்கள், இணையமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டம் நடைபெற உள்ளது. அரசு நிர்வாகம், சீர்திருத்தங்கள், நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்டங்கள் குறித்து பெண்கள், இளைஞர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது உள்ளிட்டவை குறித்து, இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளதாக தெரிகிறது.



பிலிப்பின்ஸில் இந்தியா–ஆசியான் உச்சி மாநாட்டில் பங்கேற்று தாயகம் திரும்பிய பின்னர், அமைச்சர்கள் அனைவருடனும் புதன்கிழமை காலை பிரதமர் மோடி கலந்துரையாட உள்ளதாகக் கூறப்படுகிறது.

அரசு எதிர்கொண்டு வரும் பிரச்னைகள், சவால்களை அமைச்சர்கள் நன்கு புரிந்துகொள்ள உதவும் நோக்கில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, இந்தக் கூட்டம் நடைபெற உள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பரில் 'சிந்தன் ஷிவிர்' என்ற பெயரில், மத்திய அமைச்சர்கள், இணையமைச்சர்கள் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றது. அவர்கள் 8 குழுக்களாகப் பிரிக்கப்பட்ட நிலையில், ஒவ்வொருவருடனும் பிரதமர் மோடி தனித்தனியாக கலந்துரையாடினார். அந்தக் கூட்டத்தில் அரசின் அனைத்து திட்டங்களும் தகுதிவாய்ந்த பயனாளிகளுக்கு 100 சதவீதம் சென்றடைவதை உறுதி செய்வது குறித்தும், மக்களின் நலனுக்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை மக்களிடம் திறம்பட கொண்டு சேர்ப்பது தொடர்பாகவும் அமைச்சர்கள் விரிவாக விவாதித்தனர்.

உலகத் தலைவர்களுக்கு மோடியின் பாரம்பரியப் பரிசுகள்!

மணிலாவில் நடைபெற்ற இந்தியா–ஆசியான் மற்றும் குவாட் மாநாடுகளில் பங்கேற்ற பிரதமர் மோடி, உலகத் தலைவர்களுக்கு இந்தியக் கைவினைப் பொருட்களைப் பரிசளித்தார். டிரம்பிற்கு நத்வாரா ஓவியம், ஜப்பான் பிரதமருக்கு பனாரசி பட்டு, ஆஸ்திரேலிய பிரதமருக்கு ஜெய்ப்பூர் நீல மண்பாண்டம் வழங்கினார். பிற தலைவர்களுக்கு வெள்ளி உருளி, சோழர் பாணி வெண்கலச் சிற்பம், பஷ்மினா சால்வை, பட்டுக் கம்பளம், ரோகன் ஓவியம் ஆகியவற்றை வழங்கிய மோடி, பயணத்தை முடித்து டெல்லி திரும்பினார்.



வ.உ.சிதம்பரனார் நினைவு நாளை முன்னிட்டு முதல்வர் விஜய் புகழஞ்சலி!

சென்னை, நவ. 18–

'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு



ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்த சுதந்திரப் போராட்ட வீரரும், சுதேசிக் கப்பல் போக்குவரத்தைத் தொடங்கியவருமான 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களின் நினைவு நாளில் அவரது இணையற்ற தியாகத்திற்கும், நாட்டுப்பற்றிற்கும் எனது வீரவணக்கங்கள்!

தாய்நாட்டின் விடுதலைக்காகவே தனது சொத்துகளையெல்லாம் இழந்து, சிறைக் கொடுமைகளை அனுபவித்த வ.உ.சிதம்பரனார் அவர்களின் கொள்ளுப்பேரன் திரு. வ.உ.சி. ஜெகதீஷ் சுபாஷ் அவர்களை இன்று சந்தித்து, அவரது குடும்பத்தினரின் நலன் குறித்து விசாரித்தேன்.

வ.உ.சிதம்பரனார் அவர்களின் துணிச்சலும், தன்மானமும், தமிழ் மொழி மற்றும் தாய்நாட்டின் மீது கொண்ட பற்றும், தொழிலாளர்கள் மீது அவர் கொண்டிருந்த அக்கறையும் என்றும் நமக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழும்.

சுதேசி உணர்வையும், சுயசார்பு சிந்தனையையும், நாட்டுப்பற்றையும் மக்கள் மனங்களில் விதைத்த வ.உ.சிதம்பரனார் அவர்களின் கொள்கைகளைப் பின்பற்றி நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம்!



தமிழ்நாடு முதலமைச்சர்ச.ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், இந்தியத் தொழில் கூட்டமைப்பின் (Confederation of Indian Industry–CII) தலைவர் ஆர்.முகுந்தன், தென் மண்டலத் தலைவர் பு. ரவிச்சந்திரன், தென் மண்டல இயக்குநர் இந்திரனில் கோஷ், தமிழ்நாடு தலைவர் மற்றும் இயக்குநர் பா. ஜெய்கிருஷ்ணன் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

ரஷிய விமானம் சைபீரியாவில் விபத்து: 19 பேர் உயிரிழப்பு!

சைபீரியா, நவ. 18–

சைபீரியாவில் ரஷிய ராணுவ போக்குவரத்து விமானம் விபத்துக்குள்ளான சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த விபத்து காரணமாக விமானத்தில் இருந்த 19 பேரும் உயிரிழந்ததாக மாஸ்கோவின் பாதுகாப்பு அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது.

அடுத்தடுத்து முடங்கும் அமெரிக்க சேவைகள்...!

அமெரிக்கா, நவ. 18–

ஆப்பிளின் ஐகிளவுட், ஸ்டோர், பே மற்றும் சப்போர்ட் சேவைகள் திடீரென முடங்கியதால் ஆயிரக்கணக்கான பயனர்கள் பாதிக்கப்பட்டனர். கணக்குகளில் உள்நுழைவதிலும் கிளவுட் சேவைகளைப் பயன்படுத்துவதிலும் சிக்கல் ஏற்பட்டது.



வழக்கமான மென்பொருள் புதுப்பிப்பின்போது ஏற்பட்ட பிழையே காரணம் என்றும், சைபர் தாக்குதல் நடைபெறவில்லை என்றும் ஆப்பிள் விளக்கமளித்துள்ளதாகச் செய்தி தெரிவிக்கிறது.

அமெரிக்காவில் மைக்ரோசாஃப்ட், விமான மற்றும் வங்கிச் சேவைகளிலும் அண்மையில் பாதிப்புகள் ஏற்பட்ட நிலையில், இச்சம்பவங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை என அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 18.11.2026
பராபவ தமிழ் வருடம்
கார்த்திகை மாதம் 02-ம் தேதி

கப்பலோட்டிய தமிழன் காட்டிய கரை!



ஒரு தேசத்தின் பெருமை, அதன் செல்வத்தின் அளவால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை; பொதுநலத்திற்காகத் தமது செல்வத்தையும் சுகவாழ்வையும் துறந்த மனிதர்களின் உயரத்தாலும் தீர்மானிக்கப்படுகிறது. அந்த அளவுகோலின்படி, இந்திய விடுதலை வரலாற்றில் என்றும் உயர்ந்து நிற்பவர் வள்ளிநாயகம் உலகநாதன் சிதம்பரனார்.

நவம்பர் 18, அவரது நினைவு நாள். கப்பலோட்டிய தமிழனின் திருவுருவத்திற்கு மாலை அணிவிக்கும் இந்நாளில், அவர் நமக்கு விட்டுச் சென்ற கடமைகளையும் நினைவுகூர வேண்டும். அவரது தியாகத்தைப் போற்றுவதுடன், அந்தத் தியாகத்தின் நோக்கத்தை நமது பொதுவாழ்வில் நிறைவேற்றுவதற்கான உறுதியையும் ஏற்க வேண்டும்.

விடுதலையின் பொருளாதார அடித்தளத்தைத் தெளிவாக உணர்ந்தவர் வ.உ.சி. அந்நிய ஆதிக்கம் ஆட்சிக் கட்டிலில் மட்டுமல்லாமல், வணிகத்திலும் போக்குவரத்திலும் மக்களின் வாழ்வாதாரத்திலும் வேரூன்றியிருப்பதை அவர் கண்டார். எனவேதான், ஆங்கிலேயரின் வணிக மேலாதிக்கத்தை எதிர்த்துக் கடலில் கப்பல் செலுத்தும் துணிவை மேற்கொண்டார்.

1906ஆம் ஆண்டு உருவான சுதேசிக் கப்பல் நிறுவனம், இந்தியர்களின் முதலீடும் ஒருங்கிணைந்த முயற்சியும் அந்நிய ஏகபோகத்தை எதிர்கொள்ள முடியும் என்பதற்குச் செயல்வடிவம் கொடுத்தது. தூத்துக்குடியின் கடலலைகளில் எழுந்த அந்த முயற்சி, அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் தன்னம்பிக்கைக்கு அளிக்கப்பட்ட பேரூக்கமாக அமைந்தது.

வசதியான வழக்கறிஞர் வாழ்க்கையைத் தொடர அவரால் முடிந்திருக்கும். குடும்பத்தின் நலனை மட்டும் முன்னிறுத்தி வாழ்ந்திருக்கவும் முடிந்திருக்கும். ஆனால், தம்மைச் சுற்றியிருந்த மக்களின் அடிமை வாழ்வு அவரது மனச்சாட்சியை உறங்கவிடவில்லை. நாட்டின் உரிமைக்காகத் தனது வாழ்வையே பணயம் வைத்தார்.

அதற்காக அவர் எதிர்கொண்ட சிறைக்கொடுமைகளும் செக்கிழுத்த துயரமும், விடுதலைப் போராட்டத்தின் அழியாத சாட்சியங்கள். உடலை வருத்திய அதிகாரத்தால் அவரது உள்ளத்தின் உறுதியை முறிக்க முடியவில்லை. தண்டனையின் கொடுமையைவிட, தாம் ஏற்றுக்கொண்ட இலட்சியத்தின் பெருமையை உயர்வாகக் கருதியவர் அவர்.

வ.உ.சி.யின் பொதுவாழ்வில் தொழிலாளர் நலனும் முக்கிய இடம் பெற்றிருந்தது. உழைப்பவரின் வாழ்வில் கண்ணியமும் நீதியும் நிலைக்க வேண்டும் என்ற அக்கறை அவரது விடுதலை உணர்வோடு இணைந்திருந்தது. அரசியல் உரிமையும் பொருளாதார நீதியும் ஒன்றையொன்று வலுப்படுத்த வேண்டும் என்பதை அவரது வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது.

இன்றைய தலைமுறைக்கு இந்த வரலாறு விடுக்கும் அறைகூவல் தெளிவானது. கல்வியும் தொழில்திறனும் ஆராய்ச்சியும் உற்பத்தியும் வளர வேண்டும். இளைஞர்களின் புதிய முயற்சிகளுக்கு வாய்ப்புகள் பெருக வேண்டும். சிறு தொழில்கள் நிலைத்து வளரவும் உழைப்பவர்களுக்கு உரிய ஊதியமும் பாதுகாப்பும் கிடைக்கவும் பொதுக்கொள்கைகள் துணைநிற்க வேண்டும். இத்தகைய செயல்களில்தான் பொருளாதாரத் தற்சார்பின் அடித்தளம் அமைகிறது.

சுதேசி உணர்வை வெறும் முழக்கத்திற்குள் அடைத்துவிடக் கூடாது. தரமான பொருளை உருவாக்குதல், நேர்மையான வணிகத்தை நடத்துதல், தொழிலாளரின் உரிமையை மதித்தல், பொதுமக்களின் நம்பிக்கையைக் காத்தல் ஆகிய பொறுப்புகளுடன் அதனை வளர்க்க வேண்டும். உலகுடன் உறவாடும் வலிமையும், சொந்தக் காலில் நிற்கும் ஆற்றலும் ஒரு தேசத்திற்கு ஒருசேரத் தேவை.

வ.உ.சி.யை நினைவுகூரும் கல்வி நிலையங்கள், அவரது வாழ்க்கையை மாணவர்கள் ஆராய்ந்து அறிய வழிசெய்ய வேண்டும். அவரது அரசியல் பணியோடு தொழில் முயற்சி, தொழிலாளர் அக்கறை, தமிழ்ப்பணி ஆகியவற்றையும் அறிமுகப்படுத்த வேண்டும். தியாகிகளின் வரலாறு தேர்வுக்குரிய பாடமாக இருப்பதைக் கடந்து, வாழ்வுக்குரிய அறமாக மாற வேண்டும்.

ஒரு தலைவரின் பெயரை நிறுவனங்களுக்குச் சூட்டுவது மரியாதை. அவர் ஏந்திய இலட்சியத்தை அந்த நிறுவனங்களின் செயல்பாட்டில் நிலைநிறுத்துவது இன்னும் உயர்ந்த மரியாதை. பொதுப்பணம் பொறுப்புடன் கையாளப்படும் இடத்திலும், உழைப்புக்கு மதிப்பளிக்கப்படும் இடத்திலும், தனிநலனைவிடப் பொதுநலன் முன்னுரிமை பெறும் இடத்திலும் வ.உ.சி.யின் நினைவு உயிர்பெறுகிறது.

கப்பலோட்டிய தமிழன் காட்டிய கரை, சுயமரியாதையும் பொருளாதார வலிமையும் சமூக நீதியும் கொண்ட தேசம். அந்தக் கரையை நோக்கி நமது கல்வியும் உழைப்பும் அரசியலும் பயணிக்க வேண்டும்.

அவரது திருவுருவத்திற்கு அணிவிக்கும் மலர்கள் வாடிவிடலாம். அவர் விதைத்த தன்னம்பிக்கை தலைமுறைகள்தோறும் தழைக்க வேண்டும். வ.உ.சி.யின் நினைவைச் செயலாக மாற்றுவதே, அந்தத் தியாகச் செம்மலுக்கு நாம் செலுத்தும் நிலையான அஞ்சலி!

ஆசிரியர்,
மதுரை மணி

கரூர் மாவட்ட அதிமுக செயற்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!



கரூர், நவ. 18– மாண்புமிகு கழக பொதுச்செயலாளர், புரட்சித்தமிழர், திரு எடப்பாடி கே.பழனிச்சாமி உத்தரவுக்கிணங்க, கரூர் மாவட்ட அண்ணா திமுக செயற்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம், கரூர் மாவட்ட கழக அலுவலகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மாவட்ட கழக அவைத்தலைவர் திருவிகா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கரூர் மாவட்ட கழக செயலாளர் திரு கே. கமலக்கண்ணன் அவர்கள் கலந்துகொண்டு கரூர் மாவட்ட அண்ணா திமுக செயல்வீரர்கள் வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வரும் 29ம்தேதி வருகை தரும் மாண்புமிகு கழக பொதுசெயலாளர் அவர்களுக்கு மிக சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்தும், வாக்காளர்கள் சிறப்பு முகாமில் கழக நிர்வாகிகள் பங்கீடுகள் குறித்தும், இடைதேர்தல் பணிகள் உள்ளிட்ட இதர கழக பணிகள் குறித்தும், பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

இக்கூட்டத்தின் 7 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாநில எம்ஜிஆர் மன்ற துணை செயலாளர் பசுவை சிவசாமி, மாவட்ட இணை செயலாளர், மல்லிகாசுப்பராயன் மாவட்ட துணை செயலாளர் அரவை முத்து மாநில மருத்துவரணி அணி துணை செயலாளர் மருத்துவர் திவ்யா உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர்கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தேனி மாவட்டம் பெரியகுளம் அரசு மாவட்ட மருத்துவமனையில், மாவட்ட ஆட்சித் தலைவர் சிவகிருஷ்ணமூர்த்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

சிவசேனா கட்சி நிறுவனத் தலைவர் பாலாசாகேப் தாக்கரே நினைவு நாள் அனுசரிப்பு!



சிவசேனா கட்சியின் நிறுவனத் தலைவர் பாலா சாகேப் தாக்கரே ஜி (பால்தாக்கர்) அவர்களின் 14–ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மாநிலத் தலைவர் ரவிச்சந்திரன் ஜி மற்றும் மாநில பொதுச் செயலாளர் டாக்டர். சுந்தரவடிவேல் அவர்களின் அறிவுறுத்தலின்படி இன்று திருப்பூர் யூனியன் மில் சாலையில் திருப்பூர் மாவட்ட தலைவர் கே.ஜி.சக்தி வேலன் தலைமையில் பால் தாக்கரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் மாவட்ட பொதுச்செயலாளர் வினோத்குமார், வடக்கு மாவட்ட செயலாளர் பாரதிராஜா, தெற்கு மாநகர செயலாளர் அருண்குமார் மற்றும் சிவ சேனா கட்சி நிர்வாகிகள் காந்தரூபன், அபிஷேக், மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் ஜெயந்தி, உமா மகேஸ்வரி, தயசாந்தி, வெங்கடேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நூலகப் புத்தகக் கொள்முதலில் முறைகேடு புகார்: தமிழக அரசுக்கு ஐகோர்ட் 9 கேள்விகள்!



கோவை, நவ. 18– தமிழக நூலகங்களுக்குப் புத்தகங்கள் கொள்முதல் செய்ததில் முறைகேடு நடந்ததாகக் கூறப்படும் விவகாரத்தில், தமிழக அரசு ஒன்பது கேள்விகளுக்குப் பதிலளிக்க உயர் நீதிமன்ற மதுரை கிளை கேட்டுள்ளது.:

சிறப்புப் பிரிவிலும் ஒரே விதிமுறைகளா?

கோவை ஈ.வெ.ரா. நூலகத்துக்குச் சிறப்புப் பிரிவில் புத்தகங்கள் வாங்கும்போது, பொதுப் பிரிவுக்கான கொள்கைகளும் நிபந்தனைகளும் பின்பற்றப்பட்டனவா?

புத்தகத் தேர்வுக்கு எடுத்துக்கொண்ட காலம் என்ன?

மதுரை, கோவை நூலகங்களுக்குப் புத்தகங்களைத் தேர்வு செய்து கொள்முதல் செய்ய எத்தனை நாட்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன?

எத்தனை புத்தகங்கள் வாங்கப்பட்டன?

2025 ஜனவரி முதல் டிசம்பர் வரை மதுரை நூலகத்துக்கு எத்தனை புத்தகங்கள் வாங்கப்பட்டன? கோவை நூலகத்துக்கு எத்தனை வாங்கப்பட்டன?

நிராகரிக்கப்பட்ட புத்தகங்கள் வாங்கப்பட்டனவா?

நிபுணர் குழு நிராகரித்த புத்தகங்களில் எத்தனை கோவை ஈ.வெ.ரா. நூலகத்துக்குக் கொள்முதல் செய்யப்பட்டன?

நிபுணர் குழுவின் பரிந்துரைகள் என்னவாயின?

137 உறுப்பினர்களைக் கொண்ட நிபுணர் குழு எத்தனை புத்தகங்களைப் பரிந்துரைத்தது? குழுவுக்கு எவ்வளவு கால அவகாசம் வழங்கப்பட்டது? பரிந்துரைத்தவற்றில் எத்தனை வாங்கப்பட்டன?

'அகல்விளக்கு' பதிப்பகப் புத்தகங்களைத் தேர்வு செய்த அடிப்படை என்ன?

சமர்ப்பிக்கப்பட்ட 2,300க்கும் மேற்பட்ட தலைப்புகளில் சுமார் 600 தலைப்புகளை நிராகரித்தது யார்? காரணம் என்ன? மீதமுள்ள 1,700 தலைப்புகளை வாங்க அதிகாரிகளுக்கு இருந்த அடிப்படை என்ன?

ஆங்கிலப் புத்தகங்களுக்கான செலவு எவ்வளவு?

கோவை ஈ.வெ.ரா. நூலகத்துக்கு எத்தனை ஆங்கிலப் புத்தகங்கள் வாங்கப்பட்டன? பதிப்பகங்களிடமிருந்தா, விற்பனையாளர்களிடமிருந்தா வாங்கப்பட்டன? எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது? முழு நிதியும் பயன்படுத்தப்பட்டதா?

உயர் அதிகாரிகள் கண்காணித்தனரா?

பொது நூலகத்துறை இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை செயலர் மேற்பார்வையில் கொள்முதல் நடந்ததா? அவர்கள் கோப்புகளை ஆய்வு செய்தனரா? செயலர் எழுத்துப்பூர்வ அறிவுறுத்தல் வழங்கினாரா?

பரிந்துரைத்த புத்தகங்களை வாங்காதது ஏன்?

நிபுணர் குழு பரிந்துரைத்தும் கொள்முதல் செய்யப்படாத புத்தகங்கள் எத்தனை? அவற்றை வாங்காததற்கான காரணம் என்ன?

க்யூ.எஸ். நிலைத்தன்மை தரவரிசை வெளியீடு: விஐடி பல்கலைக்கழகம் உலகளவில் 293-ம் இடம் பிடித்து சிறப்பு!



வேலூர், நவ. 18– க்யூ.எஸ். உலகப் பல்கலைக்கழகங்களின் தரவரிசைப்பட்டியலில், நிலைத்தன்மை பிரிவில் வேலூர் விஐடி பல்கலைக்கழகம் உலகளவில் 293–ம் இடமும், இந்திய அளவில் 5–ஆம் இடமும் பிடித்துள்ளது. இதுகுறித்து, விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: உலக பல்கலைக்கழகங்களின் நிலைத்தன்மை பிரிவுக்கான தரவரிசை பட்டியலை க்யூ.எஸ். அமைப்பு வெளியிட்டுள்ளது.

நிலைத்தன்மை பிரிவில் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கம், நிர்வாகம் என்ற மூன்று அளவுகோலில் தரவரிசை அளவிடப்படுகிறது. சுற்றுச்சூழல் தாக்கம் பிரிவில் நிலைத்தன்மை, கல்வி, ஆராய்ச்சி ஆகியவையும், சமூகத் தாக்கம் பிரிவில் சமத்துவம், அறிவு பரிமாற்றம், கல்வி தாக்கம், வேலைவாய்ப்பு மற்றும் சுகாதார நலன் ஆகியவையும், மூன்றாவதாக நிர்வாகப் பிரிவு என்ற அளவுகோலை வைத்து தரவரிசை கணக்கிடப்படுகிறது. க்யூ. எஸ். உலகப் பல்கலைக்கழகங்களின் தரவரிசைப் பட்டியலில் நிலைத்தன்மை பிரிவில் ஒட்டுமொத்தமாக 81.2 மதிப்பெண்களை பெற்று விஐடி பல்கலைக்கழகம், கடந்த ஆண்டை விட 59 இடங்கள் முன்னேறி உலகளவில் 293 –ம் இடத்தைப் பிடித்துள்ளது. இந்திய அளவில் 5ம் இடம் பிடித்துள்ளது. 2025–ம் ஆண்டில் உலகளவில் 352–ஆம் இடமும், இந்திய அளவில் 7–ம் இடமும் பிடித்து சிறப்பு சேர்த்தது குறிப்பிடத்தக்கது. 2027 பதிப்பில் க்யூ. எஸ். உலகப் பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் சுமார் 2,000 பல்கலைக்கழகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இதில், விஐடி பல்கலைக்கழகம் உலகின் முதல் 300 இடங்களுக்குள் இடம் பிடித்துள்ளது. விஐடி வளாகத்தில் சோலார் கார் வாகன நிறுத்தும் இடத்தில் 441 கிலோவாட் சோலார் மின்தகடு கூரை கட்டமைப்பு ஏற்படுத்தி ஆண்டுதோறும் 650 மெகாவாட் மணி நேர மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆண்டுக்கு 470 டன் கரியமில வாயு வெளியேற்றம் தடுக்கப்படுகிறது. ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. மாணவர், மாணவியர் விடுதிகளில் சேகரிக்கப்படும் உணவுக்கழிவுகள் மறு சுழற்சி செய்து 200 கிலோவாட் மணி நேர மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் 15 டன் மரக்கழிவுகளும் எரிசக்தியாக மாற்றப்படுகிறது. விஐடி வளாகம் முழுவதும் மரங்கள் நடப்பட்டு பசுமையாக இருப்பதால் உள்நாட்டு மற்றும் பருவகால பறவைகளின் புகலிடமாக திகழ்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



12 ராசிகளுக்கான பரிகார முறைகள்!



வாழ்க்கையில் முன்னேற்றம், மன அமைதி, குடும்ப ஒற்றுமை வேண்டி ஒவ்வொரு ராசியினரும் மேற்கொள்ளக்கூடிய வழிபாடுகள் ஆன்மிக நம்பிக்கையின் அடிப்படையில் பரிந்துரைக்கப்படுகின்றன.

1. மேஷம்: வெற்றி, தைரியம், தன்னம்பிக்கை மற்றும் தொழில் முன்னேற்றம் வேண்டி முருகப்பெருமானை வழிபடலாம். செவ்வாய்க்கிழமைகளில் செவ்வரளி மலர் சாற்றி, 6 நெய் தீபங்கள் ஏற்றி, பஞ்சாமிர்தம் படைக்கலாம். 'ஓம் சரவணபவ' மந்திரத்தை 108 முறை சொல்லி வழிபடுவதுடன், ஏழை மாணவர்களுக்குக் கல்வி உதவி செய்வதும் சிறப்பு.

2. ரிஷபம்: குடும்ப மகிழ்ச்சி, பொருளாதார முன்னேற்றம், மன அமைதி வேண்டி சிவபெருமானை வழிபடலாம். திங்கட்கிழமைகளில் வில்வ அர்ச்சனை, பால் அபிஷேகம் செய்து, நெய் தீபம் ஏற்றலாம். 'ஓம் நமசிவாய' மந்திரத்தை 108 முறை சொல்லலாம். பிரதோஷ வழிபாடு, கோவிலில் அன்னதானம், முதியவர்களுக்கு உணவு வழங்குதல் ஆகியவையும் சிறப்பானவை.

3. மிதுனம்: கல்வி, பேச்சாற்றல், வியாபாரம் மற்றும் வேலைவாய்ப்பில் முன்னேற்றம் வேண்டி மகாவிஷ்ணுவை வழிபடலாம். புதன்கிழமைகளில் துளசி மாலை சாற்றி, பாசிப்பருப்பு பாயசம் படைத்து, 'ஓம் நமோ நாராயணாய' மந்திரத்தை 108 முறை சொல்லலாம். பச்சை நிறப் பொருட்களையும் மாணவர்களுக்குக் கல்வி உபகரணங்களையும் தானமாக வழங்கலாம்.

4. கடகம்: மன அமைதி, குடும்ப மகிழ்ச்சி, தம்பதியர் ஒற்றுமை வேண்டி துர்க்கை அம்மனை வழிபடலாம். வெள்ளிக்கிழமைகளில் மல்லிகைப்பூ சாற்றி, நெய் தீபமும் ராகு காலத்தில் எலுமிச்சை தீபமும் ஏற்றலாம். சர்க்கரைப் பொங்கல் படைத்து, 'ஓம் தும் துர்காயை நமஹ' மந்திரத்தை 108 முறை சொல்லலாம். பெண்களுக்கு மஞ்சள், குங்குமம் வழங்குவதும் சிறப்பு.

5. சிம்மம்: புகழ், கௌரவம், பதவி உயர்வு மற்றும் தலைமைப் பொறுப்பு வேண்டி சிவபெருமானையும் சூரிய பகவானையும் வழிபடலாம். ஞாயிற்றுக்கிழமைகளில் சூரிய உதயத்தின்போது வணங்கி, சூரிய நமஸ்காரம் செய்யலாம். சிவனுக்குச் செவ்வரளி மலர் சாற்றி நெய் தீபம் ஏற்றலாம். 'ஓம் சூர்யாய நமஹ' மந்திரத்தை 108 முறை சொல்லலாம்.

6. கன்னி: கல்வி, வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி மற்றும் காரியத் தடைகள் நீங்க விநாயகரை வழிபடலாம். புதன்கிழமைகளிலும் சங்கடஹர சதுர்த்தி நாட்களிலும் அருகம்புல் மாலை சாற்றி, கொழுக்கட்டை அல்லது மோதகம் படைக்கலாம். 'ஓம் கம் கணபதயே நமஹ' மந்திரத்தை 108 முறை சொல்லலாம். ஏழை மாணவர்களுக்குக் கல்வி உபகரணங்களை வழங்கலாம்.

7. துலாம்: செல்வ வளம், பணவரவு, குடும்ப மகிழ்ச்சி மற்றும் திருமண ஒற்றுமை வேண்டி மகாலட்சுமியை வழிபடலாம். வெள்ளிக்கிழமைகளில் தாமரை அல்லது மல்லிகைப்பூ சாற்றி, நெய் தீபம் ஏற்றி, பால் பாயசம் படைக்கலாம். 'ஓம் ஸ்ரீம் மகாலட்சுமியை நமஹ' மந்திரத்தை 108 முறை சொல்லி, குங்கும அர்ச்சனை செய்யலாம். சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள், குங்குமம், வளையல் வழங்கலாம்.

8. விருச்சிகம்: மன உறுதி, தைரியம், எதிர்ப்புகளைச் சமாளிக்கும் ஆற்றல் மற்றும் தொழில் முன்னேற்றம் வேண்டி ஆஞ்சநேயரை வழிபடலாம். செவ்வாய் அல்லது சனிக்கிழமைகளில் வெற்றிலை மாலை சாற்றி, வெண்ணெய் அல்லது வடை படைக்கலாம். 'ஓம் ஸ்ரீ ஹனுமதே நமஹ' மந்திரத்தை 108 முறை சொல்லுவதுடன், ஹனுமன் சாலீசா பாராயணமும் செய்யலாம்.

9. தனுசு: கல்வி, ஞானம், திருமண வாழ்க்கை, தொழில் முன்னேற்றம் மற்றும் குருவருள் வேண்டி தட்சிணாமூர்த்தியை வழிபடலாம். வியாழக்கிழமைகளில் மஞ்சள் மலர்களால் அர்ச்சனை செய்து, கொண்டைக்கடலை சுண்டல் படைக்கலாம். 'ஓம் நமோ பகவதே தட்சிணாமூர்த்தயே நமஹ' மந்திரத்தை 108 முறை சொல்லலாம். ஆசிரியர்கள், குருமார்களிடம் ஆசி பெறுவதும் ஏழை மாணவர்களுக்குக் கல்வி உதவி செய்வதும் சிறப்பு.

10. மகரம்: தொழில் முன்னேற்றம், உத்தியோக உயர்வு மற்றும் மன நிம்மதி வேண்டி காலபைரவரை வழிபடலாம். தேய்பிறை அஷ்டமியில் செவ்வரளி மலர் சாற்றி, நல்லெண்ணெய் தீபம் ஏற்றி, தயிர் சாதம் படைக்கலாம். 'ஓம் காலபைரவாய நமஹ' மந்திரத்தை 108 முறை சொல்லலாம். ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் செய்வதும் சிறப்பு.

11. கும்பம்: உத்தியோக முன்னேற்றம், தொழில் வளர்ச்சி, கடன் சுமை குறைதல் மற்றும் மன உறுதி வேண்டி சனீஸ்வரரை வழிபடலாம். சனிக்கிழமைகளில் நல்லெண்ணெய் தீபம் ஏற்றி, எள் சாதம் படைத்து, 'ஓம் சம் சனீஸ்வராய நமஹ' மந்திரத்தை 108 முறை சொல்லலாம். கருப்பு எள், கருப்பு உளுந்து போன்றவற்றை ஏழை எளியவர்களுக்குத் தானமாக வழங்கலாம்.

12. மீனம்: மன அமைதி, குடும்ப மகிழ்ச்சி, கல்வி, தொழில் முன்னேற்றம் மற்றும் குருவருள் வேண்டி கிருஷ்ணரை வழிபடலாம். வியாழக்கிழமைகளில் கிருஷ்ணர் அல்லது பெருமாள் கோவிலில் துளசி மாலை சாற்றி, வெண்ணெய், பால் பாயசம் படைக்கலாம். 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' மந்திரத்தை 108 முறை சொல்லலாம். பகவத் கீதை பாராயணம் செய்வதும் அன்னதானம் வழங்குவதும் சிறப்பு.

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



சொரியாசிஸ் பாதிப்பு உள்ளவர்கள் உணவில் கவனிக்க வேண்டியவை!



காளாஞ்சகப்படை எனப்படும் சொரியாசிஸ் பாதிப்பு உள்ளவர்கள், உணவுப் பழக்கத்தில் கவனம் செலுத்துவது அவசியம். எந்த உணவுகள் ஏற்றவை என்பதை அறிந்து கொள்வதுடன், பாதிப்பைத் தூண்டக்கூடிய உணவுகளைக் கண்டறிவதும் முக்கியம்.

சித்த மருத்துவ அணுகுமுறையின்படி, இனிப்பு, புளிப்பு, உப்பு ஆகிய மூன்று சுவைகளையும் தவிர்க்குமாறு இக்கட்டுரை அறிவுறுத்துகிறது. குறிப்பாக, வெள்ளைச் சர்க்கரை, அதிக இனிப்புள்ள குளிர்பானங்கள், அடிக்கடி புளிக்குழம்பு சாப்பிடுதல், புளிப்பான பழங்கள், புளிக்கவைத்த உணவுகள், குளிரூட்டிப் பதப்படுத்தப்பட்ட உணவுகள், ரசாயனப் பதப்படுத்திகள் சேர்க்கப்பட்ட உணவுகள் மற்றும் பேக்கரி உணவுகளைத் தவிர்க்கப் பரிந்துரைக்கிறது.

எனினும், இந்த உணவுகள் அனைத்தையும் சொரியாசிஸ் உள்ள ஒவ்வொருவரும் கட்டாயம் தவிர்க்க வேண்டும் என்பது பொதுவான மருத்துவ விதி அல்ல. தனிநபரின் உடல்நிலை மற்றும் அறிகுறிகளுக்கு ஏற்ப, மருத்துவரின் ஆலோசனையுடன் உணவுமுறையை அமைத்துக்கொள்வது அவசியம்.

மாநில அரசுக்கு ரூ. 1,427.34 கோடி இழப்பை ஏற்படுத்திய ஆற்று மணல் முறைகேடு: துரைமுருகன் உள்பட 27 பேர் மீது வழக்குப்பதிவு!



சென்னை, நவ. 18–

திமுக ஆட்சிக் காலத்தில் மாநில அரசுக்கு ரூ. 1,427.34 கோடி இழப்பை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சட்டவிரோத ஆற்று மணல் குவாரி மோசடி தொடர்பாக, திமுகவின் மூத்த தலைவர் துரைமுருகன் மற்றும் பல அரசு அதிகாரிகள் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கு ப்பதிவு செய்துள்ளது என்று அதிகாரிகள் புதன்கிழமை தெரிவித்தனர்.

நவம்பர் 5–ம் தேதி பதிவு செய்யப்பட்ட இந்த முதல் தகவல் அறிக்கையில், திமுக முன்னாள் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற 16 முதல் 17 அரசு அதிகாரிகள், தனியார் ஒப்பந்த தாரர்கள் மற்றும் சில நிறுவனங்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

பெரிய அளவிலான சட்டவிரோத மணல் குவாரி குறித்து அமலாக்க இயக்குநரகம் வழங்கிய கடிதம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

லஞ்ச ஒழிப்புத்துறை தகவல்படி, குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஒரு குழுவாகச் செயல்பட்டு, டெண்டர் நடைமுறைகளைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றியமைப்பதன் மூலம் மாநில அரசை ஏமாற்றச் சதி செய்துள்ளனர். வெளிப்படையான விதிகளைத் தவிர்ப்பதற்காக, ஒப்பந்தங்களைப் பல சிறிய பகுதிகளாகப் பிரித்து, போட்டியைக் குறைத்து, தங்களுக்கு வேண்டிய தனியார் நபர்களுக்கு ஒப்பந்தங்களை வழங்கியதாக அதிகாரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தமிழகத்தில் திமுக ஆட்சிக் காலத்தில் 2021 முதல் 2024–ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், மாநிலம் முழுவதும் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக ஆற்று மணல் சட்டவிரோதமாக வெட்டி எடுக்கப்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக மணலைக் கடத்துவதற்கும், அதன் மூலம் முறையற்ற நிதி ஆதாயம் அடைவதற்கும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் போலியான வவுச்சர்கள் மற்றும் 'அனுமதிச் சீட்டுகளை' உருவாக்கியுள்ளனர்.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 28 இடங்களில், ஏச்சம்பாடி, கந்தனேரி, மாதவப்பெருமாள் கோவில் மற்றும் ஒருவந்தூர் ஆகிய நான்கு இடங்களில் மட்டும் நடத்தப்பட்ட மதிப்பீட்டில், 1,42,73,424 யூனிட் (4,03,93,790 கன மீட்டர்) மணல் சட்டவிரோதமாக வெட்டி எடுக்கப்பட்டது கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசுக்கு ரூ. 1,427.34 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தச் செயல்களால் கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படும் என்பது தெரிந்திருந்தும், திமுக முன்னாள் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், துறையின் முதன்மை தலைமை பொறியாளர்கள் முத்தையா, ராமமூர்த்தி, 14 அதிகாரிகள், 10 தனியார் நிறுவனங்கள், தனியார் நபர்கள் என 27 பேர் இந்த குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளதாக லஞ்ச ஒழிப்புத்துறை குறிப்பிட்டுள்ளது.

இந்த முறையற்ற மணல் குவாரி முறைகேடுகளால் நிலத்தடி நீர்மட்டம் குறைதல், கிணறுகள் வறண்டு போதல் மற்றும் நீர்வாழ் மற்றும் ஆற்றங்கரை சார்ந்த சூழல் மண்டலங்கள் அழிதல் போன்ற பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை, 2017–ஆம் ஆண்டு நவம்பர் 29–ஆம் தேதியிட்ட உத்தரவு ஒன்றில் தெரிவித்திருந்த தீவிர சுற்றுச்சூழல் குறித்த கவலைகளை, குற்றம் சாட்டப்பட்டவர்கள் புறக்கணித்ததாக அந்த முதல் தகவல் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புடைய பல்வேறு இடங்களில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் அண்மையில் சோதனைகளை நடத்தியது. மீதமுள்ள 24 குவாரிகளில் நடந்த முறைகேடுகளால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு விசாரணையின்போது மதிப்பிடப்பட்டு உறுதி செய்யப்படும் என முதல் தகவல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு - காஷ்மீர் மசூதிக்குள் பதுங்கியிருந்த லஷ்கர்-இ-தொய்பா தளபதி என்கவுன்டர்!



ஜம்மு – காஷ்மீரின் குல்காமில் கடந்த நவ. 11 ஆம் தேதி அக்ரானில் உள்ள மத்திய ரிசர்வ் படை அதிகாரிகள் சோதனைச் சாவடி மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் மூன்று இந்திய ராணுவ வீரர்கள் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் லஷ்கர்–இ–தொய்பா அமைப்பைச் சேர்ந்த உமர் நிசர் தார் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து குல்காம் மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையைத் தீவிரப்படுத்தினர். இந்த நிலையில், குல்காம் மாவட்டத்தில் ஜங்கல்பூரா பகுதியில் உள்ள மசூதியில் லஷ்கர்–இ–தொய்பா அமைப்பின் தளபதியும் சமீபத்தில் என்கவுன்டர் செய்யப்பட்ட உமர் நிசரின் கூட்டாளியுமான லத்தீஃப் பட் மறைந்திருப்பதாக உளவுத்துறை தகவல் அளித்தது. இதனைத் தொடர்ந்து, மசூதியிலிருந்து வெளியேறி சரணடையுமாறு ஜம்மு – காஷ்மீர் காவல் கண்காணிப்பாளர் அனயத் அலி, விடியோ காலில் பயங்கரவாதியிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த காணொலியை காவல்துறையினர் வெளியிட்டுள்ளனர்.

அந்த விடியோவில், "நாங்கள் இங்குதான் இருக்கிறோம்" என்று அந்த அதிகாரி கூறுவதும், அதற்கு லத்தீஃப், "நான் அல்லாவை சந்திக்க விரும்புகிறேன். நான் சந்தோஷமாக இருக்கிறேன்" என்று கூறுவதும் அதில் பதிவாகியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்திய ராணுவத்தினரும் சரணடைய பேச்சுவார்த்தை நடத்திய நிலையில், அதிகாலை 2.45 மணியளவில் லத்தீஃப் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

அவர் சரணடைய மறுத்ததைத் தொடர்ந்து, அவரை மசூதியைவிட்டு வெளியே கொண்டு வருவதற்காக கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசிப் பாதுகாப்புப் படையினர் நடவடிக்கையைத் தொடங்கினர். மசூதியைவிட்டு வெளியே வந்த லத்தீஃப்பை இந்திய ராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

சினிமா துளிகள்..!

ஓ.ம் டிக்கெட் முன்பதிவு ஆரம்பம்!



நடிகர் தனுஷின் ஓ.ம் திரைப்படத்திற்கான டிக்கெட் முன்பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன.

நடிகர்கள் தனுஷ், மம்மூட்டி, சாய் பல்லவி, ஸ்ரீலீலா, நஸ்ரூதின் ஷா உள்ளிட்டோர் நடிப்பில் உருவான ஓம் திரைப்படம் செம்மரக் கட்டைகளைக் கடத்தும் கடத்தல்காரர்களுக்கும் அதனை முறியடிக்கும் காவல்துறை அதிகாரிகளுக்கும் இடையேயான கதையாக உருவாகியுள்ளது.

மேலும், இந்தப் படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ளதால், படத்திற்கான எதிர்பார்ப்பு அதிகரித்திருக்கிறது.

அண்மையில், இத்திரைப்படத்தின் டிரைலர் வெளியாகி கவனம் பெற்றிருந்த நிலையில், ஓ.ம் திரைப்படத்திற்குத் தணிக்கை வாரியம் யு/ஏ சான்றிதழ் வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இப்படத்திற்கான டிக்கெட் முன்பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன. நவ. 20 ஆம் தேதி தென்னிந்திய அளவில் அதிக திரைகளில் ஓம் வெளியாகவுள்ளதால் தனுஷ் ரசிகர்களும் உற்சாகமடைந்துள்ளனர்.

ஆன்லைனில் இ-சிஎஸ்ஆர் பெற வசதி!

சென்னை, நவ. 18–

பொதுமக்கள் காவல் நிலையத்திற்கு நேரில் செல்லாமல், இணையதளம் வாயிலாகப் புகார்களைப் பதிவு செய்து, மின்னணு சமூக சேவைப் பதிவேடு ரசீதைப் பெறும் வசதி அறிமுகப்படுத்தப்பட வுள்ளது. பொதுமக்கள் காவல் நிலையத்திற்கு செல்லாமலேயே இணையதளம் வாயிலாகப் புகார்களைப் பதிவு செய்து, அதற்கான மின்னணு சமூக சேவைப் பதிவேடு (இ.சி.எஸ்.ஆர்) ரசீதைப் பெறும் புதிய வசதியை தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் மகேஷ்குமார் அகர்வால் இன்று (நவ. 18)



அறிமுகப்படுத்த உள்ளார். வழக்கமாகப் பொதுமக்கள் ஏதேனும் புகார் அளித்தால், காவல் நிலையத்திற்கு நேரில் சென்று சி.எஸ்.ஆர் (CSR) எனப்படும் சமூக சேவைப் பதிவேடு ரசீதைப் பெற வேண்டிய சூழல் இருந்து வந்தது.


தற்போது அறிமுகப்படுத்தப்பட உள்ள இந்த 'e–CSR' திட்டத்தின் மூலம், பொதுமக்கள் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தபடியே ஆன்லைனில் புகாரைப் பதிவு செய்து, உடனடியாக மின்னணு ரசீதைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தச் சேவை www.police.tn.gov.in என்ற இணையம் மூலம் பொதுமக்களுக்கு கிடைக்கும்.

இதன் மூலம் பொதுமக்களின் அலைச்சல் மற்றும் நேரம் மிச்சமாவதுடன், புகார்கள் மீதான நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையுடனும் விரைவாகவும் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தீவிரப் புயலானது 'அக்வான்'!

சென்னை, நவ. 18–

வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், அக்வான் புயலாக வலுப்பெற்றுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. தற்போது தென்கிழக்கு மற்றும் அதை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலைகொண்டுள்ள அக்வான் புயல், வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் தீவிரமடைய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது நவம்பர் 17–ஆம் தேதி மாலை தீவிரப் புயலாகவும், நவம்பர் 19–ஆம் தேதி அதிகாலை அதிதீவிரப் புயலாகவும் வலுப்பெறக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.



மேலும், தொடர்ந்து வடமேற்கு திசையில் நகரும் புயல், நவம்பர் 20–ஆம் தேதி நண்பகல் அளவில் ஆந்திர பிரதேசம் மற்றும் ஏனாம் கடற்கரைப் பகுதிகளில் நெல்லூர் – இடையே யானம் இடையே கரையைக் கடக்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த 'அக்வான்' புயல் தற்போது தீவிரப் புயலாக வலுப்பெற்றுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த 6 மணிநேரத்தில் மணிக்கு 3 கி.மீ. என்ற வேகத்தில் நகர்ந்து தீவிரப் புயலாக வலுப்பெற்றுள்ளது.

தொடர்ந்து வரும் 20–ஆம் தேதி நண்பகல் ஆந்திரம் மாநிலம் நெல்லூருக்கும் விசாகப்பட்டினத்துக்கும் இடையே கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக, இன்று வட தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் பல இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

பேப்பர் வெயிட்டாகப் பயன்படுத்தப்பட்ட வைரம்!

டெல்லி அருங்காட்சியகத்தில் நிஜாமின் பொக்கிஷங்கள் 184.75 கேரட் ஜேக்கப் வைரம் உள்ளிட்ட அரிய நகைகளைப் பொதுமக்கள் பார்வைக்குக் கொண்டுவரத் திட்டம்!

புதுடெல்லி, நவ. 18–

ரிசர்வ் வங்கியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள ஹைதராபாத் நிஜாம்களின் விலைமதிப்பற்ற நகைகள், டெல்லியில் அமையவுள்ள 'யுகே யுகீன் பாரத்' அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட உள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை செயலாளர் விவேக் அகர்வால் தெரிவித்துள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது. நிஜாம்களின் நகைகளை அறக்கட்டளைக ளிடமிருந்து மத்திய அரசு 1995ஆம் ஆண்டு சுமார் ரூ.217 கோடிக்குவாங்கியது. இவற்றில், கடைசி நிஜாமான மிர் உஸ்மான் அலி கான் பேப்பர் வெயிட்டாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் 184.75 கேரட் ஜேக்கப் வைரமும் அடங்கும்.



இந்த நகைகள் அவ்வப்போது டெல்லி தேசிய அருங்காட்சியகத்திலும் ஹைதராபாத் சலார் ஜங் அருங்காட்சியகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டன. அவற்றை நிரந்தரமாகப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் என நிஜாமின் வாரிசுகளும் பல்வேறு அமைப்புகளும் கோரிக்கை விடுத்து வந்தன.

ரூ.3,630 கோடியில் புதிய அருங்காட்சியகம்

டெல்லியின் நார்த் பிளாக், சவுத் பிளாக் கட்டிடங்களை மறுவடிவமைத்து, சுமார் ரூ.3,630 கோடி மதிப்பீட்டில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளதாகச் செய்தி தெரிவிக்கிறது.

நிஜாம்களின் நகைகளுடன், சிந்து சமவெளிப் பொம்மைகள், ஹரப்பா நாகரிகத்தின் புகழ்பெற்ற நடனப் பெண் சிலை, நுண்ணிய ஓவியங்கள், காந்தாரச் சிற்பங்கள் உள்ளிட்டவையும் இடம்பெற உள்ளன. நார்த் பிளாக்கில் அணிகலன்களுக்கான காட்சிக்கூடத்தை 2027ஆம் ஆண்டில் திறக்க எதிர்பார்க்கப்படுகிறது. அருங்காட்சியகத்தின் மற்ற பகுதிகள் 2030 2031 காலகட்டத்தில் படிப்படியாகத் திறக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



இஸ்மாயில் லக்கி டூராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



வேலை வாய்ப்பு

சிவகங்கை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் 20 பணியிடங்கள்!

சிவகங்கை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் தற்காலிக அடிப்படையில் 20 ஆதரவு நபர் (Support Person) பணியிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விவரம் தகவல்
நிறுவனம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, சிவகங்கை மாவட்டம்
பணிப் பிரிவு தமிழ்நாடு அரசு
பணி வகை தற்காலிகப் பணி
பதவியின் பெயர் ஆதரவு நபர் (Support Person)
மொத்த பணியிடங்கள் 20
பணியிடம் சிவகங்கை
விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள் 12.11.2026
விண்ணப்பிக்கக் கடைசி நாள் 25.11.2026
விண்ணப்பிக்கும் முறை நேரடி விண்ணப்ப முறை (Offline)
sivaganga.nic.in

பாரதியார் பல்கலைக்கழகத்தில் 5 பணியிடங்கள்!

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்வி மைய இயக்குநர், கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டாளர், கல்லூரி வளர்ச்சிக் குழு முதன்மையர், நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர், மக்கள் தொடர்பு அலுவலர் ஆகிய பதவிகளில் தலா ஓர் இடம் வீதம் 5 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

தகுதி: பதவிக்கேற்ப முதுநிலைப் பட்டம், முனைவர் பட்டம் மற்றும் தொடர்புடைய பணி அனுபவம் தேவை. விரிவான கல்வித்தகுதி, வயதுவரம்பு விவரங்களை அறிவிப்பில் காணலாம்.

தேர்வு முறை: விண்ணப்பங்கள் பரிசீலனை மற்றும் நேர்முகத் தேர்வு.

விண்ணப்பக் கட்டணம்: பொதுப் பிரிவினருக்கு ரூ.600; ஓபிசி, எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு ரூ.300. கட்டணத்தைப் பதிவாளர் பெயரில் வரைவோலையாகச் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: பூர்த்தி செய்த விண்ணப்பத்தை உரிய ஆவணங்கள் மற்றும் வரைவோலையுடன் பதிவாளர், பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் 641046 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பம் சென்றடையக் கடைசி நாள்: 30.11.2026, மாலை 5.30 மணி.

மேலும் விவரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவம்: b–u.ac.in

அணுசக்தி கல்விக் கழகத்தில் 254 ஆசிரியர் பணியிடங்கள்!

அணுசக்தி கல்விக் கழகத்தில் (AEES) 254 நிரந்தர ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப இணையவழியில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தேர்வு செய்யப்படுவோர் இந்தியா முழுவதும் பணியமர்த்தப்படுவர்.

அறிவிப்பு எண்: 01/2026
விண்ணப்பிக்கக் கடைசி நாள்: 22.11.2026, இரவு 11.50 மணி.
விண்ணப்பிக்க: www.aees.gov.in

இந்தியன் ஆயில் நிறுவனத்தில் 500 தொழிற்பழகுநர் பயிற்சி இடங்கள்!

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (IOCL) நிறுவனத்தில் ஓராண்டு தொழிற்பழகுநர் பயிற்சிக்கான 500 இடங்களுக்கு இணையவழியில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விவரம் தகவல்
நிறுவனம் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (IOCL)
அறிவிப்பு எண் PL/HR/ESTB/APPR (2026)
பயிற்சி வகை தொழிற்பழகுநர் பயிற்சி (Apprentice Training)
பயிற்சிக் காலம் ஓராண்டு
மொத்த இடங்கள் 500
பயிற்சி அளிக்கப்படும் இடம் இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள் 06.11.2026
விண்ணப்பிக்கக் கடைசி நாள் 05.12.2026
விண்ணப்பிக்கும் முறை இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம் iocl.com

ரைட்ஸ் நிறுவனத்தில் 281 தொழிற்பழகுநர் பயிற்சி இடங்கள்!

மத்திய அரசு நிறுவனமான ரைட்ஸ் லிமிடெட் (RITES Limited) நிறுவனத்தில் ஓராண்டு தொழிற்பழகுநர் பயிற்சிக்கான 281 இடங்களுக்கு இணையவழியில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விவரம் தகவல்
நிறுவனம் ரைட்ஸ் லிமிடெட் (RITES Limited)
அறிவிப்பு எண் Pers./26–10/Apprentice/2026–27/01
பணிப் பிரிவு மத்திய அரசு
பயிற்சி வகை தொழிற்பழகுநர் பயிற்சி
பயிற்சிக் காலம் ஓராண்டு
மொத்த பயிற்சி இடங்கள் 281
பயிற்சி அளிக்கப்படும் இடம் இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள் 05.11.2026
விண்ணப்பிக்கக் கடைசி நாள் 25.11.2026
விண்ணப்பிக்கும் முறை இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம் rites.com

இந்திய விமானப்படையில் 284 பணியிடங்கள்!

இந்திய விமானப்படையில் விமானப்படை பொது நுழைவுத் தேர்வு (AFCAT01/2027) மூலம் நிரப்பப்படவுள்ள 284 பணியிடங்களுக்கு இணையவழியில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விவரம் தகவல்
நிறுவனம் இந்திய விமானப்படை
பணிப் பிரிவு மத்திய அரசு
பணி வகை நிரந்தரப் பணி
தேர்வு விமானப்படை பொது நுழைவுத் தேர்வு (AFCAT01/2027)
மொத்த பணியிடங்கள் 284
பணியிடம் இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள் 12.11.2026, காலை 11.00 மணி
விண்ணப்பிக்கக் கடைசி நாள் 11.12.2026, இரவு 11.30 மணி
விண்ணப்பிக்கும் முறை இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம் afcat.edcil.co.in

இன்றைய கார்ட்டூன்

பெயரை மறைத்தால் போதுமா? விவரங்களே அடையாளம் காட்டுமே!



ராகுலின் அழைப்பை ஏற்க மறுத்த ஸ்டாலின்!

சென்னை, நவ. 18–

தமிழக சட்டசபை தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் இடம்பெற்றிருந்தன. தேர்தலுக்கு முன்பு இருந்தே திமுக – காங்கிரஸ் தொகுதி பங்கீட்டு, கூட்டணியில் குழப்பம் நீடித்து வந்தது. தேர்தலில் திமுக தோல்வியடைந்த நிலையில் கூட்டணியில் இருந்து காங்கிரஸ் வெளியேறியது. பின்னர், தவெக கூட்டணியில் இணைந்த காங்கிரஸ் ஆட்சியில் இடம்பெற்றுள்ளது. தவெக அரசில் காங்கிரசுக்கு அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சோனியா காந்தியின் சுயசரிதை புத்த வெளியீட்டு விழா நேற்று முன் தினம் டெல்லியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் முதல்–அமைச்சர் விஜய் உள்பட பல்வேறு மாநில முதல்–மந்திரிகள் கூட்டணி கட்சி தலைவர்கள், காங்கிரஸ் தலைவர்கள் என பலர் பங்கேற்றனர்.

இந்நிலையில், சோனியா காந்தியின் சுயசரிதை புத்த வெளியீட்டு விழாவில் பங்கேற்க திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி அழைப்பு விடுக்க போன் செய்துள்ளார். ஆனால் ராகுல் காந்தியின் செல்போன் அழைப்பை மு.க.ஸ்டாலின் ஏற்க மறுத்து விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.



சட்டமன்ற தேர்தல் விவகாரத்தில் இரு கட்சிகளுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகளால் ராகுல் காந்தியிடம் பேச மு.க.ஸ்டாலின் விரும்பவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது.

ராகுல் காந்தியின் அலுவலகத்தில் இருந்து மு.க.ஸ்டாலினுக்கு செல்போன் அழைப்பு சென்றுள்ளது. அதில் சோனியா காந்தியின் சுய சரிதை புத்தக வெளியீட்டு விழாவிற்கு உங்களுக்கு அழைப்பு விடுக்க ராகுல் காந்தி விரும்புவதாகவும், இது தொடர்பாக அவர் பேச விரும்புவதாகவும் மு.க.ஸ்டாலினிடம் கூறப்பட்டுள்ளது. ஆனால், வேறு நிகழ்ச்சிகள் இருப்பதால் ராகுல் காந்தியிடம் பேச முடியாது என மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். மேலும், சோனியா காந்தியின் சுய சரிதை புத்த வெளியீட்டு விழாவுக்கு வாழ்த்துகள் தெரிவிப்பதாக ராகுல் காந்தியின் அலுவலக அழைப்பிற்கு மு.க.ஸ்டாலின் பதில் அளித்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ராகுல் காந்தியுடன் மு.க.ஸ்டாலின் பேச மறுத்த நிகழ்வு தமிழக அரசியலில் இரு கட்சிகளுக்கு இடையேயான கூட்டணி முழுவதும் முறிவுக்கு வந்துள்ளது என்பதை வெளிக்காட்டுவதாக அரசியல் வட்டாரத்தில் கூறப்படுகிறது.

பொங்கல் ரிடர்ன்! முடிந்தது ரயில் டிக்கெட் முன்பதிவு!

சென்னை, நவ. 18–

பொங்கல் பண்டிகை முடிந்து சென்னை திரும்புவதற்கான முன்பதிவு டிக்கெட்கள் பெரும்பாலான ரயில்களில் சில நிமிஷங்களிலேயே விற்றுத்தீர்ந்தன. அடுத்தாண்டு (2027) ஜன.15–ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) பொங்கல் பண்டிகை கொண்டாடப் படவிருக்கிறது. ஜன. 14–ஆம் தேதி போகி, 16–ஆம் தேதி மாட்டுப்பொங்கல், 17–ஆம் தேதி காணும் பொங்கல் ஆகிய பண்டிகைகளும் அடுத்தடுத்து கொண்டாடப்படுகின்றன.

பொங்கல் பண்டிகையையொட்டி, சென்னையில் பணியாற்றும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த அரசு மற்றும் தனியார் ஊழியர்கள் தங்களது சொந்த ஊர்களுக்குச் செல்ல வசதியாக ரயில்களில் 60 நாள்கள் முன்னே டிக்கெட் முன்பதிவு செய்யலாம்.

அதன்படி, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னையிலிருந்து வெளியூருக்குச் செல்வதற்கான ரயில் முன்பதிவு டிக்கெட்டுகள் ஏற்கெனவே



முடிவடைந்துவிட்டன.

இந்த நிலையில், பொங்கல் பண்டிகையின் கடைசி நாளான காணும் பொங்கல் நாளான ஜன. 17 ஆம் தேதிக்கான (ஞாயிற்றுக்கிழமை) ரயில் டிக்கெட் முன்பதிவு இன்று காலை 8 மணிக்கு தொடங்கின.

ஜன. 18 திங்கள்கிழமை அன்று அலுவலகங்கள், பள்ளிகள் திறக்கப்படும் என்பதால், பெரும்பாலானோர் ஜன. 17 அன்று சென்னை திரும்புவதற்கு திட்டமிட்டு இன்று காலை ரயில் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்தனர்.

மதுரை, திருநெல்வேலி, செங்கோட்டை, கன்னியாகுமரி, திருச்சி, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு இயக்கப்படும் பாண்டியன், நெல்லை, பொதிகை, முத்துநகர் விரைவு ரயில்கள், கோவை, சேலம் உள்ளிட்ட மேற்கு மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு இயக்கப்படும் சேரன், நீலகிரி, மங்களூரு உள்ளிட்ட விரைவு ரயில்கள் டிக்கெட்டுகளை அனைத்து சில நிமிஷங்களிலேயே விற்றுத்தீர்ந்தன.

தமிழ்நாடு முழுவதும் இயக்கப்படும் வந்தே பாரத், தேஜஸ், சதாப்தி உள்ளிட்ட ப்ரீமியம் ரயில்களுக்கான டிக்கெட்டுகளும் முழுமையாக விற்றுத்தீர்ந்தன.

பலரயில்களுக்கான முன்பதிவில் ரெக்ரெட் வந்ததால் பலரும் ஏமாற்றமடைந்தனர்.

மேலும், ஜன. 18 திங்கள்கிழமைக்கான முன்பதிவு நாளையும் (நவ. 19), ஜன. 19 செவ்வாய்க்கிழமைக்கான முன்பதிவு நாளை மறுநாளும் (நவ. 20) காலை 8 மணிக்கு தொடங்கவுள்ளது.


மகளிருக்கு மாதம் ரூ.1,000 உதவி தொகை 2-ம் கட்டத்தில் சேர்க்கப்பட்ட பலருக்கு நிறுத்தம்!

சென்னை, நவ. 18–

தமிழகத்தில், கடந்த தி.மு.க., ஆட்சியில், மகளிருக்கு மாதம், 1,000 ரூபாய் வழங்கும் திட்டம், 2023ல் தொடங்கப்பட்டது. முதல் கட்டமாக, 1.06 கோடி பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களின் வங்கி கணக்கில், மாதம் 1,000 ரூபாய் செலுத்தப்பட்டது. விடுபட்டவர்கள் விண்ணப்பிக்க வாய்ப்பளிக்கப்பட்டது.

அவ்வாறு விண்ணப்பித்தவர்கள் தேர்வு செய்யப்பட்டு, மொத்தம், 1 கோடியே, 13 லட்சத்து 75 ஆயிரத்து 492 பேருக்கு மாதம்தோறும், 15ம் தேதியன்று, 1,000 ரூபாய் செலுத்தப்பட்டது. சட்டசபை தேர்தல் நெருக்கத்தில், விடுபட்ட பெண்களை சேர்க்க, அரசு சார்பில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு, மனுக்கள் பெறப்பட்டன.

மொத்தம், 28 லட்சம் பேர் விண்ணப்பித்த நிலையில், 16.94 லட்சம் பேர் தேர்வு செய்யப்பட்டு, 2025 டிசம்பர் முதல், 1.31 கோடி பயனாளிகளின்



வங்கி கணக்கில் மாதம்தோறும், 1,000 ரூபாய் செலுத்தப்பட்டு வந்தது. தற்போது, தேர்தல் நெருக்கத்தில் சேர்க்கப்பட்ட பயனாளிகளில், 50 சதவீதம் பேருக்கு கடந்த மூன்று மாதங்களாக, 1,000 ரூபாய் வரவில்லை என, புகார்கள் எழுந்துள்ளன.

இது குறித்து, பாதிக்கப்பட்டோர் கூறியதாவது: கடந்த ஆகஸ்டில் இருந்து, அரசின், 1,000 ரூபாய், வங்கி கணக்கிற்கு வரவில்லை. தாலுகா அலுவலகங்களில் கேட்ட போது, 'இரண்டாம் கட்டத்தில் சேர்க்கப்பட்ட வர்களில் பெரும்பாலானோர், அரசு நிபந்தனைக்கு உட்படவில்லை. தகுதி இல்லாதவர்களுக்கு, 1,000 ரூபாய் வழங்கப்படாது' என்று கூறுகின்றனர்.

ஏற்கனவே உதவித் தொகை வழங்கிய நிலையில், தற்போது நிறுத்தியதற்கான காரணத்தை, முறைப்படி பயனாளிகளின் மொபைல் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்., வாயிலாக தெரிவிக்க வேண்டும். தற்போதைய நிலவரப்படி, மாதம் எத்தனை பேரின் வங்கி கணக்கில், தலா, 1,000 ரூபாய் செலுத்தப்படுகிறது என்ற விபரத்தை, அரசு வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

இது குறித்து, நிதித்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ''பயனாளிகள் விபரம் சரிபார்க்கப்பட்டு வருகிறது. அரசின் நிபந்தனைக்கு உட்பட்ட, தகுதியான நபர்களுக்கு மாதம் தோறும், 1,000 ரூபாய் வங்கி கணக்கில் தொடர்ந்து செலுத்தப்படுகிறது. தகுதி இல்லாதவர்களுக்கு நிறுத்தப்படுகிறது,'' என்றார்.

தங்கத்தின் விலை அதிரடி குறைவு!

சென்னை,நவ. 18–

அதிரடியாக தங்கத்தின் விலை மீண்டும் கிராமுக்கு ரூ.255 குறைந்து, ரூ.12,215–க்கும், பவுனுக்கு ரூ.2,040 குறைந்து, ரூ.97,720–க்கு விற்பனையாகிறது. 11 மாதங்களுக்கு பிறகு தங்கம் விலை ரூ.97 ஆயிரத்துக்கு வந்துள்ளது நகைப்பிரியர்களிடையே பெரும் மகிழ்ச்சியை தந்துள்ளது.

இதேபோன்று வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.5 குறைந்து ஒரு கிராம் ரூ.185–க்கும் ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.1.85 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.



பள்ளிக்கல்வி ஊழியர்கள், துறை தேர்வில் 5 ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெறுவது கட்டாயம்!

சென்னை, நவ. 18–

தமிழக பள்ளிக்கல்வித்துறையில் பணியாற்றும் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் தகுதிகாண் பருவம் தொடர்பாக மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகளுக்கு பள்ளிக்கல்வி துறை இயக்குனர் ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். அந்த சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:–

பள்ளிக்கல்வி துறையில் கருணை அடிப்படை, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் கீழ் நிலைப்பதவியில் இருந்து பணி மாறுதல், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் இருந்து பள்ளிக்கல்வித்துறைக்கு ஈர்க்கப்பட்டவர்கள் போன்ற முறைகளில் நியமனம் செய்யப்பட்ட உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்களுக்கு தகுதிகாண் பருவம், தமிழ்நாடு அரசு பணியாளர்கள் சட்டத்தின்படி 5 ஆண்டுகள் வரை நீடித்து, அக்காலக்கட்டத்திற்குள் துறை



தேர்வு களில் தேர்ச்சி பெறுவது கட்டாயம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் சட்டத்தில் தகுதி காண்பருவத்தினர் நிர்ணயிக்கப்பட்ட துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற 5 ஆண்டுகள் வரை தகுதி காண் பருவத்தை தனியர் பொருட்டு நீட்டிப்பு செய்யலாம் என்றும், அவ்வாறு 5 ஆண்டுகளுக்குள் துறை தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என்றால் தகுதிகாண் பருவத்தினை முடிவுக்கு கொண்டு வருதல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பட்டுள்ள வரம்புக்குள் தேர்ச்சி பெறாதவர்களை தகுதி காண் பருவத்தை முடிவுக்கு கொண்டுவந்து பணியில் இருந்து விடுப்பு செய்ய வேண்டுமே தவிர, அவர்களை பணியில் தொடர அனுமதிக்க நியமன அலுவலர்களுக்கு அதிகாரம் இல்லை.

எனவே இனிவரும் காலங்களில் மேற்கூறிய சட்டப்பிரிவின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேலும் பள்ளிக்கல்வி இயக்கத்தின் கீழ் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் இது தொடர்பான உரிய அறிவுரைகள் வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாடு அரசு பணியாளர்கள் சட்டத்தின்படி உதவி யாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் தகுதி காண் பருவம் முடித்தல் தொடர்பாக மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றியும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகளுக்கு தெரி விக்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கார்த்திகை தீபத்திருவிழா: பரணி, மகா தீபம் நுழைவுச்சீட்டு முன்பதிவு தொடக்கம்!

திருவண்ணாமலை, நவ. 18–

திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழாவில் பரணி தீபம் மற்றும் மகா தீபம் தரிசனத்திற்கான நுழைவுச் சீட்டுகளை இலவசமாக இணையதளம் மூலம் பெற முன்பதிவு தொடங்குகிறது என்று கோவில் இணை ஆணையர் பரணிதரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற கார்த்திகை தீபத் திருவிழாவின் போது பரணி தீபம் மற்றும் மகாதீபம் தரிசனத்திற்கான ரூ.500 மற்றும் ரூ.600 மதிப்பிலான கட்டண நுழைவுச்சீட்டுகள் 1600 எண்ணிக்கையில் இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்யப்பட்டது.

இந்த ஆண்டு கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு பக்தர்களின் நலன் கருதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் அறிவுறுத்தலின்படி பரணி தீபம் மற்றும் மகா தீபம் தரிசனத்திற்கான நுழைவுச்சீட்டு முற்றிலும் இலவசமாக 3 ஆயிரம் எண்ணிக்கையில் இணைய தளம் வாயிலாக முன்பதிவு செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி வருகிற 24–ந் தேதி அன்று நடைபெற உள்ள பரணி தீபம் தரிசனத்திற்கு திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த உள்ளூர் பக்தர்களுக்கு 500 நுழைவுச்சீட்டுகளும்,



திரு வண்ணாமலை மாவட்டம் தவிர்த்து பிற மாவட்டங்களைச் சேர்ந்த பக்தர்களுக்கு 500 நுழைவுச்சீட்டுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதே போல் மகா தீப தரிசனத்திற்கு திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த உள்ளூர் பக்தர்களுக்கு 1000 நுழைவுச்சீட்டுகளும், திருவண்ணாமலை மாவட்டம் தவிர்த்து பிற மாவட்டங்களைச் சேர்ந்த பக்தர்களுக்கு 1000 நுழைவுச் சீட்டுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த நுழைவுச்சீட்டுகளை பெற விரும்பும் பக்தர்கள் ஆதார் எண்ணை பயன்படுத்தி கோவிலின் அதிகாரப்பூர்வ இணையத http://annamalaiyar.hrce.tn.gov.in என்ற முகவரியில் இன்று (புதன்கிழமை) காலை 11 மணி முதல் வருகிற 20–ந் தேதி (வெள்ளிக்கிழமை) மாலை 3 மணி வரையில் முற்றிலும் இலவசமாக முன்பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் 20–ந் தேதி அன்று மாலை 4 மணியளவில் இணையதளம் வழியாக முன்பதிவு செய்த பக்தர்களில் கணினி மூலம் தானியங்கி குழுக்கள் முறையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள். இவ்வாறு தேர்வு செய்யப்படும் பக்தர்களுக்கு மின்னணு நுழைவுச்சீட்டு பதிவிறக்கம் செய்வதற்கான இணைப்புடன் கூடிய குறுஞ்செய்தி அவர்கள் முன்பதிவின் போது அளித்த செல்போன் எண்ணிற்கு தகவல் அனுப்பி வைக்கப்படும்.

தேர்வு செய்யப்பட்ட பக்தர்கள் தங்களுக்கான மின்னணு நுழைவு சீட்டினை பதிவிறக்கம் செய்து வருகிற 24–ந் தேதி அன்று அருணாசலேஸ்வரர் கோவிலின் நுழைவு வாயிலில் அதனை காண்பித்து ஸ்கேன் செய்த பின்னர் கார்த்திகை தீப தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள். மேலும் ஆதார் அடையை அடையாளச் சான்றாக கொண்டு சரிபார்த்த பின்னரே அனுமதிக்கப்படுவார்கள்.

பரணி தீபத்திற்கு பதிவு செய்பவரால் மகா தீபத்திற்கு பதிவு செய்ய இயலாது. மகா தீபத்திற்கு பதிவு செய்பவரால் பரணி தீபத்திற்கு பதிவு செய்ய இயலாது. பரணி தீபத்திற்கான முன்பதிவு செய்பவர்கள் ஒரு சீட்டு மட்டுமே பதிவு செய்ய இயலும். மகா தீபத்திற்கு பதிவு செய்பவர்கள் வெவ்வேறு ஆதார் எண்களை கொண்டு 2 பதிவுகளை மேற்கொள்ளலாம். மேற்படி நுழைவு சீட்டுகள் அனைத்தும் கணினி மூலம் தானியங்கிக் குழுக்கள் முறையில் மட்டுமே வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பள்ளிக்கரணை சதுப்பு நில வழக்கு: உச்ச நீதிமன்றத்தை அணுக சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, நவ. 18–

பள்ளிக்கரணை சதுப்பு நிலம் தொடர்பாக தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரணை மேற்கொண்ட தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயம், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை சுற்றி ஒரு கி.மீ. சுற்றளவுக்கு எந்தவொரு கட்டுமானங்களுக்கும் ஒப்புதல் வழங்கக்கூடாது என தமிழக அரசுக்கு கடந்தாண்டு செப்டம்பரில் உத்தரவிட்டிருந்தது. அந்த உத்தரவுப்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (சிஎம்டிஏ), பள்ளிக்கரணை சதுப்புநிலப்பகுதிகளைச் சுற்றி சுமார் ஒரு கி.மீ. சுற்றளவுக்கு எந்தவொரு கட்டுமானங்களுக்கும் அனுமதி வழங்க முடியாது என கடந்தாண்டு (2025) அக்டோபர் மாதத்தில் உத்தரவிட்டது.

இந்த உத்தரவால் பள்ளிக்கரணை பகுதிகளை சுற்றியுள்ள பகுதிகளில் அடுக்குமாடி கட்டுமானப்பணிகள் முழுமையாக ஸ்தம்பித்ததாகக் கூறி ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் கூட்டமைப்பான கிரெடாய் சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி



எஸ்.ஏ. தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள் முருகன் அமர்வு விசாரித்தது.

கிரெடாய் தரப்பில், "எந்தவித அறிவியல் பூர்வ ஆய்வும் மேற்கொள்ளாமல், சதுப்பு நிலத்தை சுற்றி ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்கு கட்டுமானங்கள் மேற்கொள்ளக் கூடாது என பசுமை தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும். கடந்த 7 மாதங்களாக கட்டுமானப் பணிகள் எதுவும் நடைபெறவில்லை.

பசுமைத் தீர்ப்பாய உத்தரவின் காரணமாக கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பசுமைத் தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்துவிட்டு, மீண்டும் விசாரணை நடத்த தீர்ப்பாயத்துக்கு உத்தரவிட வேண்டும்" என வாதிடப்பட்டது.

மாநில சதுப்பு நில ஆணையம் தரப்பில், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைச் சுற்றியுள்ள பகுதியில் இடைக்கால பாதிப்பு மண்டலம் வரையறுக்கும் வகையில், 36 குறிப்பிட்ட சர்வே எண்களில் உள்ள 128.19 ஹெக்டேர் பரப்பு அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும், இதில் தனியார் பட்டா நிலங்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்திருந்தனர்.

இன்று (நவ. 18) காலை இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள், சதுப்பு நிலம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால், இந்த விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தை அணுகும்படி, கிரெடாய் உள்ளிட்ட மனுதாரர்களுக்கு உத்தரவிட்டனர். மேலும், சதுப்பு நிலத்தின் எல்லையை வரையறை செய்யும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என தமிழ்நாடு மாநில சதுப்பு நில ஆணையத்துக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், கிரெடாய் உள்ளிட்டோர் தாக்கல் செய்திருந்த வழக்குகளை முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

அதிமுக ஆர்ப்பாட்டத்தில் இருந்து திடீரென வெளியேறிய எம்.எல்.ஏ.வால் பரபரப்பு!

கள்ளக்குறிச்சி, நவ. 18–

கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் பத்மஜாவுக்கு. த.வெ.க. எம்.எல்.ஏ. அருள் விக்னேஷ் ஆபாச குறுஞ்செய்தியை அனுப்பியதாக கூறப்படும் புகார் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இச்சம்பவத்தை கண்டித்தும், பாரபட்சமின்றி உரிய விசாரணை செய்து தவறிழைத்தவர் மீது கடும் நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தியும் அ.தி.மு.க. சார்பில் நேற்று கள்ளக்குறிச்சியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் மோகன் பேசிக்கொண்டிருந்த போது, ராகேஷ் எம்.எல்.ஏ. திடீரென ஆர்ப்பாட்ட மேடையில் இருந்து கீழே இறங்கி, தனது காரில் ஏறி புறப்பட்டு சென்றார். இதுகுறித்து விசாரித்தபோது,



ஆர்ப்பாட்டத்தின் போது பேசுவதற்காக ராகேஷ் எம்.எல்.ஏ. மைக் கேட்டதாகவும், அதற்கு மாவட்ட செயலாளர் குமரகுரு மறுப்பு தெரிவித்ததாகவும், இதனால் கோபமடைந்த ராகேஷ் எம்.எல்.ஏ. ஆர்ப்பாட்டத்தில் இருந்து வெளியேறியதாகவும் கூறப்படுகிறது. இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ராகேஷ் எம்.எல்.ஏ., சங்கராபுரம் சட்டமன்ற தொகுதியில் தனது வெற்றிக்கு எதிராக கள்ளக்குறிச்சி அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் குமரகுரு பல்வேறு விதமான இடையூறுகளை செய்ததாக பல்வேறு குற்றச்சாட்டுகளை தெரிவித்தார்.

மேலும் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழாவில் அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் குமரகுரு இல்லாமல் திறப்பு விழா நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் கலந்து கொண்டு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்தார். இதனால் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினருக்கும், அ.தி.மு.க. மாவட்ட செயலாளருக்கும் இடையே உட்கட்சி பூசல் ஏற்பட்டுள்ளதாக கட்சி நிர்வாகிகள் தரப்பில் பேசப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020